சுருக்கம்

பேருந்து நிலையம் – தேனி அல்லிநகரம் நகராட்சி – ரூ.1150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் – நிர்வாக அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

அரசாணை (நிலை) எண்.119 நாள் 21.6. 2010

படிக்க:

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.27771/2010 ப்பி3, நாள் 17.6.2010.

-----

**ஆணை:**

தேனி அல்லிநகரம் நகராட்சியில் ஏற்கனவே செயல்பட்டுவரும் பேருந்து நிலையம் 'B' கிரேடு அந்தஸ்திலும் 25 எண்ணிக்கை பேருந்து நிறுத்துமிடம் (Bus Bays) கொண்டதாகவும் செயல்பட்டு வருகிறது என்றும், மேற்படி பேருந்து நிலையத்திற்கு தினசரி சுமார் 600 பேருந்துகள் 1913 தடவைகள் பேருந்துகள் நிலையத்திற்குள் வந்து செல்வதால் பேருந்து நிறுத்துமிடத்தின் பற்றாக்குறையின் காரணமாக பேருந்துகள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக நிறுத்தப்படுகிறது என்றும், இதனால் பேருந்து நிலையத்திற்குள் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது என்றும் மேலும் தற்போதுள்ள பேருந்து நிலையம் நகரின் மத்தியிலும் மார்க்கெட் பகுதியிலும் அமைந்துள்ளதால் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வழியில்லை என்றும் இதனால் நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது என்றும், எனவே நகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு வனத்துறைக்கு சொந்தமான தேனி பெரியகுளம் புறவழிச்சாலையில் RF எண் 3–ல் அமைந்துள்ள சுமார் 7.35 ஏக்கர் நிலத்தில் "A" கிரேடு அந்தஸ்துடன் கூடிய புதிய பேருந்து நிலையம் மற்றும் பெரு வணிக வளாகம் (Shopping Mall) அமைக்க நகர் மன்றம் தனது தீர்மான எண்.355, நாள் 30.07.2007 –ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

2. மேற்சொன்ன திட்டங்களை தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி வசதிக் கழக நிறுவன பரிந்துரைப்படி கீழ்க்கண்ட நிதிப்பகிர்வுப்படி செயல்படுத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

i) புதிய பேருந்து நிலையம்

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சியின் பங்கு (கடைகள் மற்றும் இதர உபயோகம் மூலம் கிடைக்கும் வைப்புத் தொகை உட்பட) | 200.00 |
| 2 | அரசு மான்யம் (உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2010–11–ல் எதிர்நோக்கப்படும் தொகை) | 100.00 |
| 3 | TNUDF- கடன் | 850.00 |
| | **மொத்தம்** | **1,150.00** |

**ii)** <u>பெரு வணிக வளாகம்</u>

| | | (ரூபாய் இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | நகராட்சியின் பங்கு (கடைகள் மற்றும் இதர உபயோகம் மூலம் கிடைக்கும் வைப்புத் தொகை உட்பட) | 300.00 |
| 2 | TNUDF- கடன் | 150.00 |
| | மொத்தம் | 450.00 |

3. மேலும் தேனி அல்லிநகரம் நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.1606, நாள் 04.06.2010–ல் மேற்கண்ட நிதி ஆதாரங்களைக் கொண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த தீர்மானித்துள்ளது என்றும், மேலும் இத்திட்டத்திற்கான வடிவமைப்பு, வரைபடத்திற்கு மதுரை நகர் மற்றும் ஊரமைப்பு துறையின் துணை இயக்குநரின் அங்கீகாரம் எண். 11A, 11B, 11C & 11D/2010–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்கண்ட விவரங்களை தெரிவித்து தேனி அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தேனி–பெரியகுளம் புறவழிச்சாலையில் வனத்துறையிடமிருந்து சில நிபந்தனைகளுடன் பெறப்பட்டுள்ள சர்வே எண்.RF 3–ல் அமைந்துள்ள சுமார் 7.35 ஏக்கர் நிலப்பரப்பில் 'A' கிரேடு அந்தஸ்தில் ரூ.1,150/– இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கவும், புதிய பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வளாகத்தில் ரூ.450/– இலட்சம் மதிப்பீட்டில் பெரு வணிக வளாகம் (Shopping Mall) அமைக்கவும், அரசின் நிர்வாக அனுமதி கோரி தேனி அல்லி நகரம் நகராட்சி ஆணையர் கருத்துரு சமர்ப்பித்துள்ளார் என தெரிவித்துள்ளார். மேற்படி கருத்தினை பரிசீலனை செய்ததில், கட்டும்பணி பொதுமக்கள் மற்றும் தனியார் நிதிப் பங்கீட்டின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளதால் இத்திட்டம் குறித்து பின்னர் தனியே பரிசீலனை செய்யலாம் என்றும், எனவே, முதற்கட்டமாக ரூ.1150/– இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், இப்பொருள் குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரையினை ஏற்று, மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிப்பகிர்வுப்படி, ரூ.1150/– இலட்சம் மதிப்பீட்டில் தேனி–பெரியகுளம் புறவழிச்சாலையில் RFஎண். 3–ல் அமைந்துள்ள வனத்துறையிடமிருந்து பெறப்பட்ட சுமார் 7.35 ஏக்கர் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
நகராட்சி ஆணையர், தேனி அல்லிநகரம் நகராட்சி.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், மதுரை.
வன பாதுகாப்பு அலுவலர், தேனி மாவட்டம்.
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர்,, சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.